R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2015-2017
Licensed to Post Without Pre-Payment Registration No. TN/WPP-169/SR/2015-2017
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month 2017 at Batlagundu Post office.
November 2017




7 வது
வேல்டு இவான்சலிசம்
கூட்டத்தில் கலந்து
கொண்டவர்கள்

*Our Radio Program:* Sri Lanka Radio SW 31 Meter Every Saturday 5.30P.M &
Our TV Program: Nambikkai TV Every Monday & Saturday 7.30 P.M &
Tamilan TV Every Wednesday 6.15 P.M

*Cell : 94435 58041*
*Phone : 04543 263 278*
*E-Mail arjunanglory@gmail.com*

To

Postman Remarks (If Undelivered):
- ☐ Refused
- ☐ No such person
- ☐ Address insufficient
- ☐ Left without instructions
- ☐ Deceased

*Our Postal Address:*
THE WORD OF CHRIST
POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

Owned and published by B.Arjunan
from 17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan



தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 17 | நவம்பர் 2017 | கனி 12



Be thou faithful
unto death,
and I will give thee
a crown of life
Revelation 2:10

நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது
ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன் வெளிப்படுத்தல் 2:10

THE WORD OF CHRIST

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக – கொலோசெயர் 3:16

ஆசிரியர்
B. அர்ஜுனன்

## World Evangelism
## Gospel Media

**Arjunan in Tamil on Nambikkai TV & Radio:**
TV:On Monday & Saturday 7.30-7.45 p.m
Radio:Every Saturday 5.30-5.45 pm on 31 meter band of Sri Lanka Radio. *(TAMILNADU Contact Mobile: 9443558041)*

**Sunny, Francis & Vinay David in Hindi onTV:**
Every Sunday and Tuesday 7.00-7.30 p.m on shubhSandesh Hind Channel.
*(NEW DELHI Contact Mobile: 09810896789)*

**P.K.Varghese in Malayalam on TV:**
Every Saturday 6.00-6.30 a.m on Jai Hind Channel.
*(KERALA Contact Mobile: 9447035465)*

**Philemon & Kingsley in Tamil on Tamilan TV and Nambikkai TV:**
Every Sunday 6.45-7.00 a.m and Every Friday 6.00-6.30 a.m.
*(TAMILNADU Contact Mobile: 9244214421)*

**Rajanayagam in Tamil on Tamilan TV:**
Every Monday 7.00-7.15 a.m and Thursday 9.30-10.00 p.m and Saturday 7.15-7.30 a.m.
*(TAMILNADU Contact Mobile: 98427 30382)*

**P.R.Swamy & Douglas in Tamil on Radio:**
Every Sunday to Wednesday at 5.30- 5.45 p.m on 31 meter band of Sri Lanka Radio. *(KARNADAKA Contact Mobile:09844 70763)*

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Rakshana TV:**
Every Sunday 6.00 p.m Every Wednesday 6.30 p.m Every Thursday 11.00 a.m Satyavani TV Online:www.Sakthitv.in Every Wednesday & Friday 8.00 p.m. Every day at 7.30 and 3.30 .m. on Kanthi TV in A.P Only.
*(ANDRAPRADESH Contact Phone: 08842363722)*

## தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் ஊழியங்கள்


'ஒரே வழி' Master Course முடித்து சான்றிதழ் பெற்றவர்கள்


ஞானஸ்நானத்திற்கு கீழ்ப்படிந்தவர்கள் மற்றும் ஊழியர்கள்


மாதா கல்லூரியில் Mathalinka இதழ் வெளியீடு

**THE WORD OF CHRIST**
Monthly Magazine
Editor
B.ARJUNAN

**தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்**
மாத இதழின் உள்ளே...
ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
ஜெர்ரிபேட்ஸ் மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15
"The Churches Of Christ Salute you" Romans 16:16

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA



## வேத அறிவுப் போட்டி எண்: 207

போட்டியாளர்கள் கவனத்திற்கு,
கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை பின்வரும் மாத இதழில்களில் காண்க.

1. இஸ்ரவேல் அடங்காத கிடாரியைப்போல் அடங்காதிருக்கிறது என்று எந்த தீர்க்கதரிசி சொல்லுகிறான்?
2. அமைதலோடே வேலைசெய்து, தங்கள் சொந்தச் சாப்பாட்டைச் சாப்பிட வேண்டுமென்று புத்திசொல்லும் அப்போஸ்தலன் யார்?
3. யோவேல் தீர்க்கதரிசி யாருடைய குமாரன்?
4. உனக்கு அடிக்கடி நேரிடுகிற பலவீனங்களுக்காகவும், கொஞ்சம் திராட்சரசமும் கூட்டிக்கொள் என்று யாருக்கு எழுதப்பட்டது?
5. இதோ, கர்த்தராகிய ஆண்டவர் உங்களை எவைகளாலும், உங்கள் பின்சந்ததியை மீன்பிடிக்கிற தூண்டில்களாலும் இழுத்துக்கொண்டுபோகும் நாட்கள் வருமென்று அவர் எதைக்கொண்டு ஆணையிட்டார்?
6. தேவனுடைய உறுதியான அஸ்திபாரம் எப்படியிருக்கிறது?
7. நீ உன் சகோதனாகிய யாக்கோபுக்குச் செய்த கொடுமையினிமித்தம் வெட்கம் உன்னை மூடும் என்று எவனை நோக்கி சொல்லப்பட்டது?
8. விசுவாசத்திலே நம்மைச் சிநேகிக்கிறவர்களுக்கு வாழத்துதல் சொல்லு என யார் யாருக்கு எழுதுவது?
9. ஒருவேளை தேவன் மனஸ்தாபப்பட்டு, தம்முடைய உக்கிரகோபத்தை விட்டுத் திரும்பினாலும் திருப்புவார் என்று கூறச் சொன்ன ராஜா யார்?
10. கொஞ்சகாலம் உம்மைவிட்டு பிரிந்துபோனானாக்கும் என்று பிரியமுள்ள யாருக்கு பவுல் எழுதுகிறார்?



அன்பு சகோ. ஜான் எஸ். நாதன் ஐயா அவர்கள் 15.09.2017 அன்று கர்த்தருக்குள் மரித்தார்கள். அவர் உயிரோடிருந்த நாட்களில் நமது இதழில் அநேக தேவசெய்திகளை எழுதினார். அவர் விட்டு சென்ற குடும்பத்தாருக்காகவும், உறவினர்களுக்காகவும் சபையாருக்காகவும் ஜெபியுங்கள்.

"கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான்கள்" - வெளி.14:13

**போட்டியாளர்கள் கவனிக்க...**
*ஒவ்வொரு முறையும் விடை எழுதும்போது உங்களுடைய பதிவு எண் (அதாவது Ref.No) மற்றும் மொபைல் எண் எழுதவும். நமது மாத இதழை படிக்க ஆர்வமுள்ளவர்களுக்கும் அறிமுகம் செய்யவும். நன்றி. ஆசிரியர்*

## இம்மாதம் 'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' நடத்தும் வேதபாட வகுப்புகளும் சுவிசேஷ கூட்டங்களும்

25

நாள்: 24.11.2017 வெள்ளிகிழமை
நேரம்: காலை 10.00 மணி
இடம்: D. பீட்டர்துரை
வட திருவள்ளூர் கிராமம்
வெள்ளிமேடு பேட்டை (அஞ்சல்)
திண்டிவனம் தாலுகா, விழுப்புரம் மாவட்டம்
தொடர்புக்கு: 7639671644






சிறுவர் பகுதி

# அகியா - Ahijah

வேதபகுதி: 1இராஜாக்கள் 14:1-18



அகியா ஒரு தீர்க்கதரிசி. இவன் இஸ்ரவேலின் ராஜாவாகிய யெரொபெயாமின் நாட்களில் தீர்க்கதரிசனம் உரைத்தான். யெரொபெயாமின் குமாரனாகிய அபியா வியாதியில் இருக்கும்போது, அவன் தன் மனைவியைப் பார்த்து நீ ஒருவரும் அறியாதபடிக்கு வேஷம் மாறி நீ உன் கையில் பத்து அப்பங்களையும், பணியாரங்களையும் ஒரு கலசம் தேனையும் எடுத்துக் கொண்டு சீலோவுக்குப் போ அங்கே உள்ள அகியா பிள்ளைக்குச் சம்பவிக்கப்போகிறது இன்னதென்று அவன் உனக்கு அறிவிப்பான் என்றான். தேவன் தம்முடைய தீர்க்கதரிசிகளுக்கு காரியத்தை மறைப்பாரா? அவள் வருமுன்னே அகியாவுக்கு கர்த்தர் அதைக் குறித்து வெளிப்படுத்தினார். நீ அவளுக்கு இன்ன இன்ன பிரகாரமாகச் சொல்லவேண்டும்; அவள் உட்பிரவேசிக்கிறபோது, தன்னை அந்நிய ஸ்திரீயாகக் காண்பிப்பாள் என்றார்.

தேவனுக்குக் கீழ்ப்படிந்த அகியா தீர்க்கதரிசி என்னசெய்தார் தெரியுமா? இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: ஜனத்தினின்று உன்னை நான் உயர்த்தி, உன்னை இஸ்ரவேல் என்னும் என் ஜனத்தின்மேல் அதிபதியாக வைத்தேன் நீரோ, என் கற்பனைகளைக் கைக்கொண்டு, என் பார்வைக்குச் செம்மையானதையே செய்ய, தன் முழு இருதயத்தோடும் என்னைப் பின்பற்றின என் தாசனாகிய தாவீதைப்போல நீ இராமல், உனக்கு முன்னிருந்த எல்லாரைப்பார்க்கிலும் பொல்லாப்புச் செய்தாய்; ஆகையால் நீ எழுந்து, உன் வீட்டுக்குப் போ, உன் கால்கள் பட்டணத்தின் முன் பிரவேசிக்கையில் பிள்ளையாண்டான் செத்துப்போவான் என்று சொல்லி அவளை அனுப்பிவிட்டான். அந்தப்படியாக அவள் பட்டணத்தில் பிரவேசிக்கையில் அவன் செத்துப்போனான். யெரொபெயாமோ நல்ல வார்த்தை கிடைக்கும் என்று தன் மனைவியை அனுப்பினான். தேவனோ அவனுடைய பாவத்தை உணர்த்தினார்.

அகியாவைப்போல உள்ளதை உள்ளபடியே சொல்ல கர்த்தருக்கு ஊழியக்காரர்கள் தேவை. அப்படிப்பட்டவர்களோடு கர்த்தருடைய வார்த்தை தங்கும். அகியா அவள் கொண்டுவந்த பத்து அப்பங்களின் மீதும், பனியாரத்தின் மீதும், ஒரு கலசம் தேனின் மீதும் தன் கவனத்தை வைக்கவில்லை. கர்த்தர் சொன்னதையே அவளுக்கு அறிவித்தான். உங்கள் சபை போதகர் எப்படிப்பட்டவர்? வேத வசனங்களை உள்ளபடியே எடுத்துச் சொல்லுகிறாரா! அப்படியில்லையென்றால் வேதவசனத்தின்படி சொல்லச்சொல்லுங்கள்.

மனப்பாட வசனம்:

**மனப்பாட வசனம்**

**"மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கும்: அதில் பிரியப்படுகிறவர்கள் அதின் கனியைப் புசிப்பார்கள்"**

**(நீதிமொழிகள் 18:21)**




# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

## THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் – 17 நவம்பர் –2017 கனி – 12


ஆசிரியருரை

## சோம்பல்

## Laziness



**சோ**ம்பலினால் அநேக தேவனுடைய ஆசீர்வாதங்களை ஒவ்வொருநாளும் இழக்கிறோம். இந்த சோம்பலிலிருந்து விடுபட வழி என்ன? இதற்கு வேதாகமம் ஒரு நல்ல ஆலோசனையை நமக்குக் கொடுக்கிறது. "சோம்பேறியே, நீ எறும்பினிடத்தில் போய், அதின் வழிகளைப் பார்த்து ஞானத்தைக் கற்றுக்கொள். அதற்குப் பிரபுவும், தலைவனும், அதிகாரியும் இல்லாதிருந்தும், கோடைகாலத்தில் தனக்கு ஆகாரத்தைச் சம்பாதித்து, அறுப்புக்காலத்தில் தனக்கு தானியத்தைச் சேர்த்துவைக்கும்" (நீதி.6:6-8). மனிதன் சில தொழிலை கற்றுக்கொள்வதற்காக பயிற்சி பெறும்படி பல இடங்களுக்கு கடந்துசெல்கிறான். அதற்குவேண்டிய பணமும் செலுத்தி பயிற்சி பெறுகிறான். கர்த்தர் ஒரு இலவசமான பயிற்சியை சோம்பலுள்ளவர்களுக்கு அளிக்கும்படியாக எறும்பினிடத்தில் போய் அதின் வழிகளைப் பார்த்து ஞானத்தைக் கற்றுக்கொள் என்கிறார். இதற்காக நீங்கள் பணம் செலவழிக்கவேண்டியதில்லை. வெகுதூரம் சென்று பயிற்சிபெறவேண்டிய அவசியமில்லை.

உங்கள் வீட்டின் ஓரங்களில் உள்ள எறும்பு புற்றுக்களை கண்ணோக்கிப் பார்ப்பீர்கள் என்றால், அது எவ்வளவு சுறுசுறுப்பாய் காரியங்களை செய்கிறது, எப்படி செய்கிறது என்பதை நீங்கள் காணமுடியும். அது தனக்கு வேண்டிய ஆகாரத்தை கோடைகாலத்திலே சம்பாதித்துவைக்கிறது. அறுப்புக்காலத்திலே அதிகமாக தானியங்கள் கிடைக்கும் ஆகையால் அந்தக்காலத்தில் அது விழித்திருந்து சேர்த்துவைக்கிறது. அதற்கு தலைவன் இல்லை, அதிகாரியில்லை, பிரபுக்கள் இல்லை. ஆனாலும் பூமியிலே சிறியவைகளாயிருந்தும் மகா ஞானமாக காரியங்களைச் செய்கிறது. அவைகளைப் பார்க்கிலும் எத்தனையோ மடங்கு உயர்வாக சிருஷ்டிக்கப்பட்டவன் மனிதன். அவன் சோம்பலுள்ளவனாயிருக்கிறபடியால் அவனைப்பார்த்து கர்த்தருடைய வேதம் நீ போய் எறும்பினிடத்தில் கற்றுக்கொள் என்று ஆலோசனை சொல்லுகிறது. தேவசாயலில் உண்டாக்கப்பட்ட மனிதன் ஞானத்தை இழந்து சோம்பேறியாக மாறும்போது முழுபெலத்தையும் இழக்கிறான். ஆகையால் சத்துவமற்ற சந்துவாகிய எறும்போ அவனுக்கு ஆலோசனை சொல்லும் ஆசிரியாராக இருக்கிறது. "சோம்பேறி குளிருகிறதென்று உழமாட்டான்; அறுப்பிலே பிச்சைகேட்டாலும் அவனுக்கு ஒன்றுங்கிடையாது" (நீதி.20:4). இப்படிப்பட்டவனுக்கு யார் பிச்சை கொடுப்பார்கள்? அவனுக்கு

கைகால்கள் நன்றாக இருக்கிறது ஏதாவது ஒரு வேலைசெய்து பிழைக்கக்கூடாதா என்று சொல்லி அவனை அனுப்பிவிடுவார்கள். எறும்புகளிடமிருந்து கற்றுக்கொள்ளும் மற்றொரு காரியம். எறும்புகள் யாராவது வந்து கொடுப்பார்கள் என்று ஏங்கிக்கொண்டு இருப்பதில்லை. தனக்குவேண்டிய போஜனமிருக்கும் இடத்தை அது அறிந்து உடனே சென்று அவைகளை உண்ணவும், சேகரிக்கவும் ஆரம்பிக்கிறது. பெரிய பள்ளத்தாக்குகளாக இருந்தாலும், மாட மாளிகைகளாக இருந்தாலும் அவைகள் அங்கு சென்று தனக்குவேண்டியவைகளை பெற்றுக்கொள்ளுகிறது. ஆனால் சோம்பேறியோ "தன் கையைக் கலத்திலே வைத்து அதைத் தன் வாய்க்குத் திரும்ப எடுக்க வருத்தப்படுகிறான்" (நீதி.26:15). இப்படிப்பட்ட சோம்பேறி எப்படி போஷிக்கப்படுவான். சோம்பேறியின் கைகள் வேலைசெய்ய சம்மதிப்பதில்லை. மேலும் கர்த்தருடைய வசனம் சொல்லுகிறது; "சோம்பற்கையால் வேலைசெய்கிறவன் ஏழையாவான்; சுறுசுறுப்புள்ளவன் கையோ செல்வத்தை உண்டாக்கும்" (நீதி.10:4). அநேகர் பரம ஏழைகளாக போகிறார்கள் என்றால் அதற்கு முக்கிய காரணம் அவர்கள் வேலைசெய்ய விரும்புகிறதில்லை. உள்ளதுபோதும் என்று சொல்லி சோம்பலாக இருந்துகொண்டு கைமுடக்கிக் கொண்டு நித்திரை செய்வார்கள் அல்லது பொது இடங்களில் உட்கார்ந்துகொண்டு பொழுதை போக்குவார்கள் இப்படிப்பட்டவர்கள் ஒருபோதும் செல்வத்தைப் பார்ப்பதில்லை. எறும்புகளைப்போல சுறுசுறுப்பாக வேலைசெய்கிறவர்கள் என்றும் ஆசீர்வதிக்கப்படுவார்கள். அவர்கள் கைகள் செல்வத்தை உண்டாக்கும்.

சோம்பேறியின் விரும்பம் அதிகமாக இருக்கும். ஆனாலும் அவனுடைய விருப்பம் நிறைவேறுவதில்லை. "சோம்பேறியுடைய ஆத்துமா விரும்பியும் ஒன்றும் பெறாது; ஜாக்கிரதையுள்ளவர்களுடைய ஆத்துமாவோ புஷ்டியாகும்" என நீதி.13:4-ல் வாசிக்கிறோம். சோம்பேறிக்கு விருப்பம் இருக்கிறது. ஆனால் வேலைசெய்வதற்கு மனமில்லையே பின்பு எப்படி பெற்றுக்கொள்ளமுடியும். ஒரு மனிதன் தன்கைகளினால் வேலைசெய்யும்போது நல்ல பலனைப் பெற்றுக்கொள்ளுகிறான். அவனுடைய கைகளின் பிரயாசத்தை கர்த்தர் ஆசீர்வதிக்கிறார். மேலும் சோம்பேறியைக் குறித்து படிக்கும்போது; "சோம்பேறியின் கைகள் வேலைசெய்யச் சம்மதியாததினால், அவன் ஆசை அவனைக் கொல்லும்"(நீதி.21:22). சிலர் பார்த்து பார்த்து ஏங்கிப்போவார்கள். அதைப்போல வேலைசெய்ய மனமில்லாத சோம்பேறியின் ஆசை ஒவ்வொருநாளும் அவனைக் கொல்லுகிறதாயிருக்கிறது. அவன் நினைத்து நினைத்து, கொஞ்சம் கொஞ்சமாக கொல்லப்படுவான். அவனுக்கு சற்று உற்சாகம் வந்து வேட்டையாடி ஒன்றைப் பெற்றுக்கொண்டாலும் அவன் அதை சமைப்பதில்லை. ஏனென்றால் அவன் அதை சமைக்கும்படி அவனுடைய கைகள் ஒத்துழைப்பதில்லை. அவன் எப்படி திருப்தியாக சாப்பிட முடியும். ஆகையால் சோம்பலுள்ளவர்களை பார்த்து கர்த்தருடைய வசனம் மேலும் சொல்லுகிறது; "ஒருவன் வேலைசெய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாதென்று நாங்கள் உங்களிடத்தில் இருந்தபோது உங்களுக்குக் கட்டளையிட்டோமே. உங்களில் சிலர் யாதொரு வேலையும் செய்யாமல், வீண் அலுவற்காரராய் ஒழுங்கற்றுத் திரிகிறார்களென்று கேள்விப்படுகிறோம். இப்படிப்பட்டவர்கள் அமைதலோடே வேலைசெய்து, தங்கள் சொந்தச் சாப்பாட்டைச் சாப்பிடவேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே அவர்களுக்குக் கட்டளையிட்டுப் புத்திசொல்லுகிறோம்" என்கிறார் அப்.பவுல் (2தெச.3:10-12). வேதாகமம் ஒருவரையும் சோம்பலாக்குவதில்லை. தேவன்



பலியாகக் கொடுக்க வேண்டியதாயிருக்கவில்லை.

4. நமக்காக பரிதபிக்கும்படி இயேசுவானவர் நம்மில் ஒருவராக வேண்டியிருந்தது.

**சோதிக்கப்படுகிற யாவருக்கும் உதவிசெய்யும்படியாக (எபிரெயர் 2:18)**

1. பரிபூரணமாக இயேசு சோதனைகளை வென்றார் (எபிரெயர் 4:15)

2. **நாம் பின்பற்றும்படியான மாதிரி அவரே** நம்முடைய - (1பேது 2:21-22) பிதாக்களும் தீர்க்கதரிசிகளும் நாம் பின்பற்றும்படியாக போதுமான அளவுக்கு பரிசுத்தமாயிருக்க வில்லை. பாவமற்ற ஒரு மாதிரி மனிதனுக்கு தேவைப்பட்டது.

3. **அவரைப்போல நாம் இருக்கும்படி நம்மை உற்சாகப்படுத்துகிறார்.** நாம் ஒரு போதும் "ஆனால் அது உங்களுக்குப் புரியாதென்று" சொல்லமுடியாது. அவர் முன்பே செய்யாத எதையும் நாம் செய்யவேண்டுமென்று சொல்லவில்லை.

**அவர் ஊழியங்கொள்ளும்படி வராமல் ஊழியம் செய்யும்படி வந்தார் (மத்தேயு 20:28).**

1. அவர் இலட்சக்கணக்கான தூதர்களை அவர் உதவிக்கு அழைத்திருக்கலாம் ஆனால் ஊழியம்கொள்ளும்படி வரவில்லை.

ஊழியனாயிருப்பதே மிகப் பெரிய நிலை (மத்தேயு 23:11)

1. துவாலையின் கதையை நினைத்துப் பாருங்கள் (யோவான்13:5)

உலகம் (தங்களுக்கு) சேவை செய்யப்படும்படியான நோக்கமுள்ள மக்களால் நிறைந்திருக்கிறது.

1. எப்போதுமே வாங்கிக் கொண்டிருக்கவே அவர்கள் விரும்புகின்றனர்.

2. தாங்கள் அடிக்கடி சேவை செய்யப்படாததாலேயே கிறிஸ்தவர்கள் குற்றஞ்சாட்டுகிறார்கள்.

3. ஒரு குழந்தையை தமது சீடர்களின் மத்தியில் வைத்து நாம் இந்தக் குழந்தையைப் போல இருக்கவேண்டுமென்றார்.

**அவர் சமாதானத்தையல்ல, பட்டயத்தைக் கொண்டுவந்தார் (மத்தேயு 10;34)**

1. **இயேசு அன்பின் மனிதன் என்று அறியப்பட்டவர்**, அன்பாயிருப்பதென்றால் எல்லாரும் ஒத்துப் போவது என்று மனிதன் நினைக்கிறான்.

2. **பாவம் நிறைந்த மனிதன் கிறிஸ்துவுடன் ஒத்துப் போவதில்லையே. உலகம் கிறிஸ்துவை வெறுத்தது.**

3. **கிறிஸ்துவின்மேலுள்ள நமது விசுவாசம் வேறு எந்த உறவுக்கும் மேலானதாக இருக்கவேண்டும்.**

1. கட்டாயம் சத்தியத்தை செலவழித்து நாம் சமாதானமாயிருக்கக் கூடாது.

2. மத்தேயு 1:35-37

**நிறைவாக:**

1. இயேசுவானவரின் மரணத்தைப் புரிந்துக் கொள்ளவேண்டியது மிக முக்கியமானது.

2. இயேசுவானவர் ஏன் மரித்தார் என்று புரிந்துக் கொள்ளாத நிலையிலே அவர் மரணம்:

ஒரு மரண தண்டனையாகவே இருக்கும்.

குழப்பமான மத பித்தர்களின் சோக முடிவாக இருந்திருக்கும்.

தன்னுடைய நம்பிக்கைகளுக்காக உயிர் துறப்பவர், ஆனால் மற்ற அநேகர் தங்களுடைய நம்பிக்கைக்காக மரித்திருக்கிறார்கள். இந்த விதமாக இயேசுவின் மரணத்தில் ஒன்றும் விசேஷம் இருக்கவில்லை.

3. அவர் மறுபடியும் நியாயத்தீர்ப்புக்காக வருவார் (மத்தேயு 25:31-32).


பாடம் - 25

## இயேசு ஏன் பூமிக்கு வந்தார்

Why Did Jesus Come To Earth?

*- Jerry Bates*

-சென்ற மாதஇதழின் தொடர்ச்சி




2. அவர் தமது மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் மூலம் அதை நிறைவேற்றினார். அவர் தமது சுய இரத்தத்தினால் சபையை வாங்கினார்.

3. பரிசுத்த ஆவியானவரை அனுப்பியதன் மூலம் அதைச் செய்தார். நித்திய சுவிசேஷத்தை பிழையின்றி அப்போஸ்தலர்களுக்கு வெளிப்படுத்தி வழி நடத்தினார்.

4. சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதன் மூலம் அவர் அதைச் செய்தார். பெந்தெகொஸ்தே நாளுக்குப் பிறகு (கிறிஸ்துவின்) இரத்தத்தினால் கழுவப்பட்ட விசுவாசிகள் சபையென்றழைக்கப்பட்டனர்.

"என்னுடைய" என்பது கிறிஸ்துவுக்குச் சொந்தமானது. சொந்த உரிமையைக் காட்டும்படி நாம் நம்மை கிறிஸ்துவின் சபையார் என்று அழைக்கப்படக்கூடாதா?

புதிய ஏற்பாடு சபை ஒரு பெயரை கொண்டிருக்கவில்லை. ஆனால் அது எப்போதும் இயேசுவுக்கு சொந்தமான தென்றே விவரிக்கப்பட்டது.

1. என் சபை (மத்தேயு16:18)
2. சபை அல்லது சபைகள் (மத்தேயு 18:17)
3. தேவனுடைய சபை (1கொரிந்தியர் 1:2)
4. கிறிஸ்துவின் சபையார் (ரோமர் 16:16)
5. பரிசுத்தவான்களின் சபை (1கொரிந்தியர் 14:33)
6. முதற்பேறாவரின் சபை (எபிரெயர் 12:23)

5. "சபை" - இயேசு நம்மை பாவங்களைவிட்டும் சாத்தானைப் பின்பற்றுவதை விட்டும் வரும்படி அழைக்கிறார். சபையென்றால் வெளியே அழைக்கப்பட்டவர்கள்.

யோவான் 18:36,37; கொலோசெயர் 1:12-14

**ஆபிரகாமின் சந்ததியாகும்படியாக**

**தேவன் ஆபிரகாமுக்கு உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்றார் (ஆதியாகமம் 22:18).**

1. அந்த வித்து கிறிஸ்துவே (கலாத்தியர் 3:16).
2. அவர் யூதருக்கும் புறஜாதியாருக்கும் ஒரே விதமாக ஆசீர்வாதங்களைக் கொண்டுவந்தார்.

**அவர் தேவதூதருக்கு கை கொடாமல் ஆபிரகாமின் வித்தாகிய மனிதனுக்கு கைகொடுத்தார்.**

1. அவர் தேவதூதரிலும் சற்று சிறியவராக்கப்பட்டிருந்தார்.
2. ஆபிரகாம் தாவீது என்பவர்களின் வம்சவழியில் வந்தார்.

**விசுவாசத்தினாலே நாம் ஆபிரகாமின் இயல்பை அடையும்படியாக அவர் ஆபிரகாமின் சந்ததியானார்.**

உண்மையும் இரக்கமுமுள்ள பிரதான ஆசாரியராகும்படியாக (எபிரெயர் 2:17;4:14-5:6.

1. அவர் பூமியில் வாழ்வை அனுபவித்துப் பார்க்கும்படி ஒருபோதும் வந்திராவிட்டால் பரலோகத்திலே நம்மை சரியாக அடையாளபடுத்த முடியாது.
2. இயேசு தம்முடைய மேலான சொந்த இரத்தத்தை நமக்காகத் தந்தார்.
3. அவர் தம்முடைய சொந்த பாவத்துக்காக அவருடைய இரத்தத்தை



ஆறுநாளும் வேலைசெய்து நாம் காண்கிற அனைத்தையும் உண்டாக்கினார். ஏழாம் நாள் அவர் ஓய்ந்திருந்தார் என படிக்கிறோம். அவரால் இந்த உலகத்தில் உண்டாக்கப்பட்ட ஒருவன் வாரத்தில் ஆறுநாளும் வேலைசெய்யவும் ஒரு நாள் ஓய்வு எடுத்துக்கொள்ளவும் அனுமதிக்கப்படுகிறான். ஆகையால் இதில் வேலைசெய்ய மனதில்லாதவன் சாப்பிட கூடாது என்று அறிவுறுத்தப்படுகிறான். சோம்பேறிக்கு வேலைசெய்ய மனமில்லை ஆகையால் அவன் சாப்பிடாதிருக்கவேண்டும். எப்படி சாப்பிடாமல் இருக்கமுடியும் அது கூடாதல்லவா? எனவே, எறும்பு எப்படி தனக்குவேண்டியவைகளை தேடிக்கொள்கிறதோ அதைப்போல அவனும் தேடக்கடவன்.

சோம்பேறியின் வழி எப்படிப்பட்டது? நீதி.15:19-ம் வசனம் அது முள்வேலிக்குச் சமானம் என்று சொல்லுகிறது. முள்வேலியை ஒருவன் கடப்பது மிகவும் கடினம். எவ்வளவுதான் கவனமாக அடியெடுத்து வைத்தாலும் எங்கிருந்தாவது முள் அவனை குத்திவிடும் அப்படிபட்ட வழியில் செல்ல கால தாமதம் ஆகும். அந்தப்படியாக சோம்பேறியின் வழியும் இருக்கிறது. அந்த வழி ஒருவருக்கும் பிரயோஜனமில்லை. அவனுடைய வழியைக்குறித்து நாம் மற்றவர்களுக்கு போதிக்க முடியாது. அவனுடைய வழியின் முடிவு அழிவு என காண்கிறோம். முற்களை அழித்துப்போடுவது போல அவனுடைய வழியும் அழிக்கப்படும். சோம்பேறியை நம்பி ஒரு காரியத்தை செய்ய முடியாது. ஏனென்றால்; " பற்களுக்குக் காடியும், கண்களுக்குப் புகையும் எப்படியிருக்கிறதோ, அப்படியே சோம்பேறியும் தன்னை அனுப்புகிறவர்களுக்கு இருக்கிறான்" (நீதி.10:26). கசப்பானதை நாம் குடிக்கும்போது நம்முடைய பற்களுக்கு அவைகள் எப்படியிருக்கிறதோ அப்படியே சோம்பேறியும் இருப்பான். அதைப்போல நம்முடைய கண்களுக்கு புகை எப்படி பகையாக இருக்கிறதோ அப்படியே சோம்பேறியும் இருப்பான். அவனை நம்பி ஒரு காரியத்தையும் செய்யமுடியாது. அதினாலே நமக்கு நஷ்டம் ஏற்படும். எப்படி "மூடன் கையிலே செய்தி அனுப்புகிறவன் தன் கால்களையே தறித்துக்கொண்டு நஷ்டத்தை அடைகிறானோ" அதைப்போல சோம்பேறி தன்னை அனுப்புகிறவர்களுக்கு நஷ்டத்தை ஏற்படுத்துவான். சோம்பேறியைப்பற்றி மேலும் சொல்லவேண்டுமானால் அவனைக்குறித்து சாலொமோன்; "கதவு கீல்முளையில் ஆடுகிறதுபோல, சோம்பேறியும் படுக்கையில் ஆடிக்கொண்டிருக்கிறான்" என்கிறார் (நீதி.26:14). அதிகமான சோம்பேறிகள் இந்தவிதமாக செய்கிறதை நம்முடைய வாழ்க்கையில் பார்க்கமுடிகிறது. படுத்துக்கொண்டு நான் அதை செய்திடுவேன் இதைசெய்திடுவேன் என்று சொல்லுவான். ஆனால் அவனால் ஒன்றும் செய்யமுடியாது என்பதுவே உண்மை. கதவு கீல்முளையில் ஆடுகிறது அது அங்கேயே ஆடிக்கொண்டிருக்கும். அதைப்போலவே சோம்பேறியும் படுக்கையில் ஆடிக்கொண்டிருப்பான். இப்படிப்பட்ட சோம்பேறி கவனிக்கவேண்டியதும், கற்றுக்கொள்ளவேண்டியதும் எங்கே என்றால் எறும்பினிடத்தில் என்று வேதம் சொல்லுகிறது.

"பூமியிலே சிறியவைகளாயிருந்தும், மகா ஞானமுள்ளவைகள் நான்குண்டு" நீதி.30:24. அதில் ஒன்று எறும்பு. இது அற்பமான ஜெந்துவாயிருந்தும், கோடைகாலத்திலே தங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை சம்பாதிக்கிறது. அவைகளை சோம்பேறி கவனிக்கவேண்டும். அது தேவனுடைய சிருஷ்டிப்பிலே மிகவும் அற்பமாக படைக்கப்பட்டிருக்கிறது. அது தனக்கு இருக்கிற சக்தியால் தனக்கு வேண்டிய ஆகாரத்தை அதினதின் காலத்திலே நேர்த்தியாக

சம்பாதித்துவைத்துக்கொள்ளுகிறது. தேவனுடைய சாயலில் உண்டாக்கப்பட்ட நீ சோம்பலாக இருந்துகொண்டு உனக்குவேண்டியவைகளை யாராவது கொடுப்பார்கள் என்று ஏங்கி காத்திருப்பது உனக்கு அவமானமல்லவா! அதைப்போல சத்துவமற்ற ஜெந்துவாயிருந்தும், தங்கள் வீட்டைக் கன்மலையிலே தோண்டிவைக்கும் குழிமுசல்கள். வேதாகமம் இதை சத்துவமற்ற ஜெந்து எனக்குறிப்பிடுகிறது. ஆம், இதைப்பிடித்துப்பார்த்தால் மிகவும் மென்மையாக இருக்கும். இது தன்னுடைய விடாமுயற்சியினால் தன்னுடைய வீட்டை கன்மலையில் தோண்டி கட்டுகிறது. சிலர் கன்மலைகளை தோண்டும்போது மிகவும் கடினமாக இருக்கிறது இதற்கு வெடி வைத்துதான் இதை தகர்க்கவேண்டும் என்பார்கள். அவ்வளவு கடினமுள்ளதாக இருக்கும். கன்மலையிலே குழிமுசல்கள் குடிகொள்ளுகிறதே! அவைகளை சோம்பேறி நோக்கிப்பார்க்கவேண்டும்.

அதைப்போல ராஜா இல்லாதிருந்தும் பவுஞ்சு பவுஞ்சாய் புறப்படுகிற வெட்டுக்கிளிகளைக் குறித்து நீதி.30:27-ம் வசனத்தில் படிக்கிறோம். நிர்வாகத்தில் நிர்வாக அதிகாரி இல்லாதிருந்தால் எப்படியிருக்கும்? ஒரு நாட்டில் ராஜா இல்லாதிருந்தால் அந்த ராஜ்யபாரம் எப்படியிருக்கும்? ஆனால் வெட்டுக்கிளிகளுக்கு ராஜா இல்லாதிருந்தும் அவைகள் பவுஞ்சு பவுஞ்சாய் புறப்படுகிறது, அது நமக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கிறது. ஒரு சிறிய வெட்டுக்கிளிக்கு இவ்வளவு ஞானத்தையும் பெலத்தையும் கொடுத்திருக்கும்போது எல்லா சம்பத்துக்களையும் தேவ சமூகத்தில் பெற்றுக்கொண்ட மனிதன் சோம்பலாக இருக்கலாமா? மேலும், தன் கைகளினால் வலையைப்பின்னி, அரசர் மாளிகைகளில் இருக்கிற சிலந்திப்பூச்சிகளை நாம் கவனிக்கும்போது, அது எவ்வளவு அழகாக தன் கைகளினால் வலையைப்பின்னுகிறது. உயர்வான இடங்களில் இருக்கிற அரசர் மாளிகைகளில் அவர்களுக்கும்மேலான இடங்களில் கட்டுகிறது. ஒரு மாளிகையைக் கட்ட எத்தனையோ வருடங்களை எடுத்துக்கொள்ளுகிறார்கள். மகா சிறியவைகளாகிய இந்த சிலந்திப்பூச்சி யாருடைய உதவியும் இல்லாமல் தன் கைகளினாலே வலையைப் பின்னுகிறது, தனக்கு வேண்டிய இடத்தை தானே ஏற்படுத்திக்கொள்கிறது. இப்படி சத்துவமற்ற ஜெந்துக்களாக இருந்தும் அவைகள் செய்கிற காரியங்களை நோக்கிப்பார்க்கும்போது நமக்கு அது வெட்கமாக தோன்றுகிறது. உலகத்தில் உள்ள சகல ஜீவசந்துக்களையும் ஆண்டுகொள்ளும் படியான அதிகாரத்தை பெற்றவன் மனிதன். அவன் சோம்பல் உள்ளவனாக இல்லாமல், நலமான காரியங்களைச் செய்ய தன்னை ஒவ்வொருநாளும் ஈடுபடுத்தவேண்டும். தேவனாகிய கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்தில் அழைத்துக்கொண்டுவந்து, அதைப் பண்படுத்தவும் காக்கவும் வைத்தார் என ஆதி.2:15-ம் வசனத்தில் படிக்கிறோம். தேவனுடைய இந்த நோக்கத்தை புரிந்துகொண்டு சோம்பல் இல்லாதவர்களாக தேவனுடைய சித்தம் செய்யுங்கள்.

**சோம்பலின் அப்பத்தை கொடாமல் இருக்கிறவள் யார்?**

குணசாலியான ஸ்திரீ. அவளைக்குறித்து நீதிமொழிகள்31:10-31 வசனங்களில் படிக்கிறோம். அவள் சோம்பலின் அப்பத்தைப் புசியாமல், தன் வீட்டுக்காரியம் எப்படி நடக்கிறது என்று கண்ணோக்கமாயிருக்கிறாள். ஆகையால் அவள் பிள்ளைகள் எழும்பி, அவளைப் பாக்கியவதி என்கிறார்கள்; அவள் புருஷனும் அவளைப்பார்த்து; அநேகம் பெண்கள் குணசாலிகளாயிருந்ததுண்டு; நீயோ அவர்கள் எல்லாருக்கும் மேற்பட்டவள் என்று அவளைப் புகழுகிறான். இப்படிப்பட்ட ஸ்திரீகளைப் பார்ப்பது அரிதாக இருக்கிறது. ஏனென்றால் தன் வீட்டுக்காரியங்களை




**MATHA GROUP OF COLLEGES & INSTITUTIONS**
**Annavasal Road, Vaanpuram, Manamadurai -630 606.**
**SIVAGANGAI DIST**

| | |
|---|---|
| B.Sc., Degree in Nursing | 4 years |
| M.Sc., Degree in Nursing | 2 years |
| Diploma in Nursing | 3 years |
| B.P.T. (Bachelor of Physiotherapy) | 4 years |
| ARTS and SCIENCE | |
| B.A., B.B.A., B.Com., B.Sc., | 3 years |
| P.G.D.C.A., | 1 year |
| M.Sc., Computer Science | 2 years |
| TRAINING INSTITUTE | |
| Electrician, Motor Mechanic | 2 years |
| Diesel Mechanic | 1 year |
| Diploma in Teacher Education | 2 years |
| B.Ed., Degree Course | 2 years |


*Mr.P.Jeyakumar, M.A.B.L., Chairman, MMET*

- குறைந்த கட்டணம்!
- நிறைந்த கல்வி!!
- 100 சதவீதம் வேலைவாய்ப்பு
- சிறந்த உணவு, விடுதி வசதி
- இயற்கை சூழ்நிலை
- கல்லூரி பஸ்வசதி
- சிறப்பான பேராசிரியர்கள்

*சேருங்கள் பயனடையுங்கள்*

**பாலிசி தொகை ரூ. 25,000/-**
**பணம் கிடைக்கும் வயது : 55**

| பாலிசி எடுத்த வயது | மாத பிரிமீயம் | கட்டும் தொகை | கிடைக்கும்முதிர்வுத் தொகை தோராயம் |
|---|---|---|---|
| 20 | 50 | 21,000 | 68,750 |
| 21 | 52 | 21,216 | 67,500 |
| 22 | 54 | 21,384 | 66,250 |
| 23 | 57 | 21,888 | 65,000 |
| 24 | 59 | 21,948 | 63,750 |
| 25 | 62 | 22,320 | 62,500 |
| 26 | 64 | 22,272 | 61,250 |
| 27 | 67 | 22,512 | 60,000 |
| 28 | 70 | 22,680 | 58,750 |
| 29 | 74 | 23,088 | 57,500 |
| 30 | 78 | 23,400 | 56,250 |
| 31 | 82 | 23,616 | 55,000 |
| 32 | 85 | 23,460 | 53,750 |
| 33 | 90 | 23,760 | 52,500 |
| 34 | 95 | 23,940 | 51,250 |
| 35 | 100 | 24,000 | 50,000 |
| 36 | 107 | 24,396 | 48,750 |
| 37 | 114 | 24,624 | 47,500 |
| 38 | 122 | 24,888 | 46,250 |
| 39 | 129 | 24,768 | 45,000 |
| 40 | 139 | 25,020 | 43,750 |

பிரிமியம், / Service Tax இல்லாமல் கணக்கிடப்பட்டுள்ளது.
**பாலிசி ஒன்றை எடுப்போம்**
**பாதுகாப்பும் பயனும் பெறுவோம்!!**

**இந்திய அஞ்சல் துறை**
India Post
மத்திய, மாநில, பொதுத்துறை
ஊழியர்களின் சமூக பாதுகாப்புத் திட்டம்
வளமான, பாதுகாப்பான எதிர்காலத்தை உறுதி செய்வீர்!



**சிறப்பு அம்சங்கள்**

- ★ 130 வருட பாரம்பரியமிக்க பழையான ஆயுள் காப்பீடு.
- ★ குறைவான பிரிமியம், அதிக போனஸ்
- ★ வருமான வரிச்சலுகை
- ★ கடன் வசதி
- ★ வாரிசு மற்றும் உரிமை மாற்றம் செய்யும் வசதி.

**நடைமுறையிலுள்ள திட்டங்கள்**

- ★ முழு ஆயுள்காப்பீடு (WLA-Whole Life Assurance)
- ★ குறித்த கால ஆயுள் காப்பீடு (CWA-Convertible whole Life Assurance)
- ★ குறித்த கால எதிர்பார்ப்பு காப்பீடு (ABH-Articipated Endowmend Assuracne)
- ★ கணவன்-மனைவி குறித்தகால ஆயுள் காப்பீடு (YS Joint Life Endowment Assurance)
- ★ குழந்தைகள் பாலிசி (Children Policy)

**இந்திய அஞ்சல் துறை**

**திட்டத்தின் சிறப்பு அம்சங்கள்**

1. 10 வயதிற்குட்பட்ட பெண் குழந்தைகள் பெற்றோர்/காப்பாளர் மூலம் கணக்கு துவங்கலாம்.

2. காப்பாளர் அதிகபட்சமாக இரண்டு சேமிப்புக் கணக்குகளை இருவேறு குழந்தைகளின் பெயரில் துவங்கலாம்.

3. குறைந்த பட்ச முதலீடாக ரூ1000/- மற்றும் அதிகபட்ச முதலீடாக ரூ1,50,000/- வரை ஒரு நிதியாண்டில் சேமிக்கலாம்.....

செலுத்தும் தொகைக்கு வருமான வரி விலக்கு உண்டு (80C).

**முதுநிலை அஞ்சல் கோட்ட கண்காணிப்பாளர்**
**திண்டுக்கல் கோட்டம்**
**திண்டுக்கல் -624 001**


**"உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது"**
**ரோமர் 13:1**

**அனைவரும் இத்திட்டத்தில் தங்களால் இயன்ற அளவுசேமித்துப் பயன் பெற வேண்டுகிறோம்**

தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனைத் தேவன் கெடுப்பார்; தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது நீங்களே அந்த ஆலயம்" என்றும் (1கொரி.3:16,17).

"உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும், உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்" (1கொரி.6:19,20).

**கிறிஸ்தவத்தின் உயர்வு ஊழியமே, பிச்சையெடுக்கும் தொழில்அல்ல**

அநேகம் மார்க்கங்களில் உள்ள பெரிய பக்தர்கள் மார்க்கத்தின் பெயரால் அவர்களுக்கான பூமிக்குரிய தேவைகளுக்கு விநியோகம் செய்வதற்கு வேலை செய்யாமல் சரியான பிச்சைக்காரார்கள் ஆகிறார்கள். கிறிஸ்தவர்கள் வேலை செய்ய வேண்டியது அவசியமானதாயிருக்கிறது. "ஒருவன் வேலை செய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாதென்று நாங்கள் உங்களிடத்தில் இருந்தபோது உங்களுக்கு கட்டளையிட்டோம்" (2தெச.3:10).

"ஒருவன் தன் சொந்த ஜனங்களையும், விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற்போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும்,அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான்" (1தீமோ.5:8).

"அந்தப்படி நீங்கள் மக்கெதோனியா நாடெங்குமுள்ள சகோதர ரெல்லாருக்கும் செய்துவருகிறீர்கள். சகோதரரே, அன்பிலே நீங்கள் இன்னும் அதிகமாய் பெருகவும்; புறம்பேயிருக்கிறவர்களைப் பற்றி யோக்கியமாய் நடந்து, ஒன்றிலும் உங்களுக்குக் குறைவில்லாதிருக்கும்படிக்கு, நாங்கள் உங்களுக்குக் கட்டளையிட்டபடியே அமைதலுள்ளவர்களாயிருக்கும்படி நாடவும், உங்கள் சொந்த அலுவர்களைப் பார்க்கவும், உங்கள் சொந்தக் கைகளினாலே வேலை செய்யவும் வேண்டுமென்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறோம்" (1தெச.4:10-12).

**தேவனுடைய செல்வாக்கு நம்முடைய ஜீவியங்களில் நம்மை மாற்றும்.**

"ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்; இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை.

"கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள். நாம் ஆவியினாலே பிழைத்திருந்தால், ஆவிக்கேற்றபடி நடக்கவும் கடவோம்"

"வீண்புகழ்ச்சியை விரும்பாமலும், ஒருவரையொருவர் கோபமூட்டாமலும், ஒருவர்மேல் ஒருவர் பொறாமைகொள்ளாமலும் இருக்கக்கடவோம். தன் மாம்சத்திற்கென்றுவிதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான்; ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்திய ஜீவனை அறுப்பான்.

"நன்மை செய்கிறதில் சோர்ந்துபோகாமல் இருப்போமாக; நாம் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்றகாலத்தில் அறுப்போம்.

"ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத் தக்கதாக யாவருக்கும் விசேஷமாக விசுவாசக்குடும்பத்தார்களுக்கும், நன்மை செய்யக்கடவோம்" (கலாத்.5:22-26; 6:8-10).



கவனிப்பதில்லை. டிவி சீரியல் என்று உட்கார்ந்துகொண்டு நேரத்தை கழித்துக்கொண்டிருக்கிறார்கள். பிள்ளைகள் பள்ளிக்கு சென்று வீடுதிரும்பியவுடன் அம்மா பசிக்கிறது ஏதாவது செய்து கொடுங்கள் என்று கேட்டால், கடையிலே போய் ஏதாவது வாங்கிக்கொள் என்று பணத்தைக்கொடுப்பார்கள், அப்படியில்லை யென்றால் கொஞ்சம் பொறு என்று சொல்லி அவன் கேட்டு, கேட்டு சலித்து தூங்கியவுடன் ஏதாவது ஒன்றை செய்து எழுப்பி கொடுப்பார்கள். இப்படி கொடுத்தால் அது சோம்பலின் அப்பமாகத்தானிருக்கும். நீங்கள் ஒரு குணசாலியாக இருந்து உங்கள் வீட்டை கவனியுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

- **அக் வுய் ரூபரேலியா வயது 19 பள்ளியில் படித்து வரும் இவர் ரியல் எஸ்டேட் தொடர்பான இணையதளம் ஒன்றை துவக்கி 12 மாதங்களில் 100 கோடி சம்பாதித்து இந்திய வம்சாவளியைச் சேர்ந்த இளம் கோடீஸ்வரர் என்ற பெருமையை பெற்றுள்ளார்.**
- **உலகின் 119 நாடுகளில் நடந்த கருத்துக்கணிப்பின்படி 2017-ம் ஆண்டுக்கான பட்டினி குறியீடு வெளியிடப்பட்டது. இதில் இந்தியா 100 வது இடத்தில் உள்ளது.**
- **நீர் மூழ்கிக் கப்பல்களை கண்டுபிடித்து தாக்க வல்ல உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட, ஐ.என்.எஸ்., கிஸ்தான் போர்கப்பலை ராணுவ அமைச்சர், நிர்மலா சீதாராமன் நாட்டுக்கு அர்ப்பணித்தார்.**

நடப்புச் செய்திகள்

**நம்பிக்கை TV சேனலில்**

**திங்கள் & சனிக்கிழமை**
**மாலை 7.30 மணி முதல் மற்றும்**
**தமிழன் TV ல் புதன் கிழமை**
**மாலை 6.15 மணிமுதல்**
**'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்'**
**நிகழ்ச்சிகளைப் பாருங்கள்**

**9443558041**

'ஒரே வழி' வேதபாடம் **The Master Course**
படிக்க விரும்புகிறவர்கள்
இன்றே தபால் செலவுக்காக
ரூபாய் 50-ஐ அனுப்பி,
ஒரு வருடத்தில் பயின்று **Certificate**
பெற்றுக்கொள்ளுங்கள் வயது: 20 க்கு மேல்.
**Batlagundu Bible College, P.O. Box No. 5,**
**Batlagundu-624 202, South India.**

தெரிந்து கொள்வோம்

## பெயர்கள் உருவான விதம்

K.R.K.Ravi Asir

- **ஹனாய் (வியட்நாம்)**

**சீனர்களால் கி.பி.43-ம் ஆண்டில் உருவாக்கப்பட்ட நகரமாகும். சீன மொழியில் இதற்கு "நதியின் வளைவுக்குள்" என்று பொருளாகும்.**

- **பாக்தாத் (ஈராக்)**

**இஸ்லாமிய தலைவர் மன்சூர் என்பவரால் எட்டாம் நூற்றாண்டில் இந்நகரம் உருவாக்கப்பட்டது. பெர்சிய மொழியில் "ஆண்டவரின் அருட் கொடை" என்பது இதன் பொருளாகும்.**

- **அல்ஜீரியா (வட ஆப்பிரிக்கா)**

**தீவு என்னும் பொருள் தரும் "அல் ஜஸீரா" என்ற சொல்லில் இருந்தே அல்ஜீரியா உருவானது 1962-ம் ஆண்டில் பிரான்ஸிடமிருந்து சுதந்திரம் பெற்றது**

தேவ செய்திகள் அடங்கிய
CD & DVD எங்களிடம்
உள்ளது ரூ.100/-
அனுப்பி பெற்றுக்கொள்ளுங்கள்
உங்கள் முகவரி மற்றும்
மொபைல் எண்ணை SMS
பண்ணவும். **9443558041**



# நாம் ஏன் ஜெபத்தை நம்புகிறோம்

## Why We Believe In Prayer

*J.C.Choate*




ஜெபம் என்பது ஒரு வேதாகம காரியம். இதன் பொருள் பேசுவது, சம்பாஷிப்பது அல்லது தேவனை நோக்கி விண்ணப்பம் பண்ணுவது என விவரிக்கப்படுகிறது. அப்போஸ்தலனாகிய பவுல், "நீங்கள் ஒன்றுக்குங் கவலைப் படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்" (பிலி.4:6) என்றான்.

தேவனிடத்திலுள்ள நம்முடைய உறவில், அவர் நம்முடைய பிதா, கிறிஸ்தவர்களாகிய நாம் அவருடைய பிள்ளைகள். தேவன் நம்மிடம் ஒன்றும் எதிர்பார்க்கிறதில்லை, அவர் நித்தியமானவர், வல்லமையுடையவர், அவர் ஒருவரிடமிருந்தே எல்லா ஆசீர்வாதங்களும் வருகிறது. யாக்கோபு, "நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது; அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை" (யாக்.1:17) என்கிறான். பிள்ளைகளாகிய நாம் தேவனை உடையவர்களாயிருக்கிறோம். அவர் நம்முடைய பிதா, நம்முடைய தேவைகளுக்காகவும், சோதனைகளை மேற்கொள்ள அவருடைய உதவிக்காகவும், நாம் பாவஞ்செய்யும் போது பாவமன்னிப்பிற்காகவும் நாம் கட்டாயமாக அவரிடம் செல்லவேண்டும்.

இப்போது நாம் கர்த்தரிடத்தில் விண்ணப்பத்தை ஏறெடுப்பது பற்றியும் ஜெபத்தைப்பற்றியும் மேலும், அவர் நமக்குச் செவிகொடுத்து நம்முடைய ஜெபங்களுக்குப் பதிலளிக்கிறாரென்ற அவருடைய உறுதியைப் பற்றியும் சில வேதவாக்கியங்களில் காண்போம். கிறிஸ்து தம்முடைய நாட்களில் சீஷர்களுக்கு, "நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன். என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்" (யோவா.14:13,14) என்றார். மீண்டும் அவர், "நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்" (யோவா.15:7) என்றார். பிறகு அவர், "நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை; நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்; நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக்கொள்வது எதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத்தக்கதாக நீங்கள் போய்க் கனிகொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும், நான் உங்களை ஏற்படுத்தினேன்" (யோவா.15:16) என்றார்.

மலையில் பிரசங்கித்துக்கொண்டிருக்கையில், இயேசு, "கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்; ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்" (மத்.7:7,8) என்றார்.



சாட்சியாக இருக்கிறார்கள்.

ஒருவன் தன்னுடைய இருதயத்தில் உணருகிற சமாதானமும், அதனுள்ளே பிரகாசிக்கிற சந்தோஷமும் நன்மை செய்வதிலிருந்து வருகிறது. நம்மைச் சுற்றிலும் இருக்கிறவர்களுடைய ஜீவியங்களில் **சந்தோஷத்தை கொண்டுவரும்படியாக, ஒருவன் எப்படி நடத்தப்பட வேண்டுமோ** அப்படியே நடத்த வேண்டும். சரியானது **என்று எதை நாம் அறிந்திருக்கிறோமோ** அவை அனைத்தையும் நாம் செய்ய வேண்டும், அப்பொழுதுதான் அந்த நாளின் முடிவிலே நாம் நம்முடைய மனசாட்சிகள் நமக்குள்ளே **சமாதானமாய் இருப்பதை** நாம் தேடி காண இயலும். இவைகளே கிறிஸ்தவன் தன்னை சுற்றிலும் இருக்கிறவர்களிடமிருந்து வித்தியாசப்படுத்தி காண்பிக்கிறவைகளாக சொல்லப்பட்டிருக்கின்றன.

அவனுடைய ஜீவியத்தில் மாய்மாலம் இல்லை, தேவனுக்கு ஊழியஞ் செய்வதில் மறைவான தூண்டுதல் இல்லை; வாழ்க்கையிலுள்ள எல்லா பிரச்சனைகளும் சீக்கிரம் தீர்ந்துவிடும் என்று பார்க்கும்படியாக கொஞ்சகாலம் தேவனை சோதனையில் வைத்திருக்கும் மனப்பான்மை இல்லை.

சேவிக்கும்படியாக வேறே தேவன் இல்லை என்பதை கிறிஸ்தவன் அறிந்திருக்கிறான்; தேவன் தன்னை நேசிக்கிறார் என்பதையும், "அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்" (ரோம.8:28) என்று வாக்குத்தத்தம் செய்திருக்கிறார் என்பதையும் அவன் அறிந்திருக்கிறான்.

கிறிஸ்தவன் தன்னுடைய ஜீவனை தேவனிடத்தில் கொடுக்கையில் அந்த ஜீவனைக்குறித்து தேவன் அக்கறையாயிருக்கிறார். இருதயத்தின் எல்லா வேதனைகளையும், கவலைகைளையும் பகிர்ந்து கொள்ளவும் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார் என்பதை அறிகிறான். ஒவ்வொரு நாளும் கிறிஸ்தவன் தன்னுடைய விருப்பங்களையும் ஆசைகளையும் தேவனுடைய வைகளைப்போல் அதிகமாகவும், சுயத்துக் குரியவைகளில் குறைவாகவும் அமைத்துக்கொள்ளும்போது, அவன் தன்னுடைய ஜீவியத்தை வளமானதாகவும், ஆசீர்வாதங்கள் நிறைந்ததாகவும் காண்கிறான்.

தங்களை பின்பற்றுகிறவர்கள் தங்கள் மேல் மாம்சத்துக்குரிய தண்டனையை வருவித்து, தங்களையே வருத்திக் கொள்ளும்படியும், தாழ்த்தும்படியும், பூமிக்குரிய தேவைகளை மறுக்கும்படியும், கொடூரமான வேதனைகள் அடையும்படியும், தங்களை தாங்களே மறுதலித்து மரணத்தின் நுனிக்கு செல்ல சிலமார்க்கங்கள் கேட்டுக் கொள்கின்றனர்.

கிறிஸ்தவர்கள் தம்மை தாமே தங்களை தேவனுக்கென்று அளிக்க வேண்டியதாயிருந்தாலும், அப்படிப்பட்ட மாம்சரீதியான தகாத வழக்கம் எதுவும் செய்யும்படியாக கேட்கப்படவில்லை. மாறாக நாம் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்படிருக்கிறோம். கிறிஸ்தவர்களாகிய நாம் நம்முடைய சரீரங்கள் பரிசுத்தாவியானவரின் ஆலயமாகிறது என அறிவுறுத்தப்பட்டிருக்கிறோ - அவர் நமக்குள் வாசம்பண்ணுகிறார் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் நாம் இவ்வாறாக எச்சரிக்கப்படுகிறோம்:

"நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? ஒருவன்

### பாடம் -13

## ஆராதனை நிறைந்த ஜீவியம்

## The Worshipful Life

*-Betty*




**அன்றாட ஜீவியத்தில் மெய்யான ஆராதனையின் பலன்**

**ஒரு கிறிஸ்தவன் ஆராதனைக்கு பின் வெளியே செல்லும்போது தேவனோடே கூட உள்ள நெருக்கத்தின் சந்தோஷத்தினால் அவனுடைய இருதயம் பிரகாசிக்கும் அவன் பரிசுத்தமானவனாகவும் சுத்திகரிக்கப்பட்டவனாகவும் உணருகிறான் அவனுடைய வழிகள் தேவபக்தியின் புதிய உயரங்களுக்கு உயர்த்தப்படுகின்றன. அவன் கற்றுக்கொண்ட காரியங்களில் ஒவ்வொரு நாளும் ஜீவிக்கும்படி உற்சாகப்படுத்தப்படுகிறான்.**

**தேவனுடைய குணாதிசயங்களை அறிந்த கிறிஸ்தவன் எல்லா மனுஷரிடத்திலும் அன்பாகவும், நியாயமாகவும், நீதியாகவும், சமாதானமாகவும் நடந்து கொள்வதினாலே அவைகளை தன்னுடைய ஜீவியத்திலே பிரதிபலிக்க வாஞ்சையுள்ளவனாயிருக்கிறான். அவனுடைய அன்றாட ஜீவியம் ஒரு ஆராதனை மற்றும் ஊழியம் செய்வதாகவும், தேவனோடு கை கோர்த்து நடப்பதாகவும் இருக்கிறது.**

ஒவ்வொரு மார்க்கமும் ஏதோ ஒரு வகை பலியை வலியுறுத்துகிறது. சில மார்க்கங்கள் பிராணிகளின் ஜீவன்களையும், சில மார்க்கங்கள் மலர்களையும், பணத்தையும் மற்ற மார்க்கங்கள் அன்பின் ஞாபகமூட்டல்களையும், இன்னும் சில மார்க்கங்கள் மனுஷருடைய உயிரையே கொடுக்கும்படியாகவும் வற்புறுத்துகின்றன. கிறிஸ்தவனானவன் ஒரு மனிதனால் செய்யக்கூடிய மிகப்பெரிய ஒரு பலியை செலுத்தும்படி தேவன் எதிர்பார்க்கிறார் - அவனுடைய சொந்த ஜீவன். ஆனால் ஒரு செத்த சரீரம் தேவனை சேவிக்க முடியாது. ஆகையால் தேவன் என்ன கேட்டிருக்கிறார் என்றால்; "...அப்படியிருக்க சகோதரரே, நீங்கள் உங்கள் **சரீரங்களைப்** பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான **ஜீவபலியாக** ஒப்புக் கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரங்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை" (ரோம.12:1)

தேவனுடைய குடும்பத்துக்குப் புறம்பே இருக்கின்றவர்களுக்கு, ஒருவனுடைய ஆசைகள் மற்றும் விருப்பங்களை மறுதலிப்பதென்பது, வாழ்வதற்கு சகித்துக் கொள்ள முடியாத ஒரு வகையான வாழ்க்கையாகத் தோன்றலாம். தேவன் என்ன கேட்டிருக்கிறாரோ அதை செய்கிற கிறிஸ்தவர்களாக இருந்தால் அதன் விளைவாக சந்தோஷத்தையும், திருப்தியையும், அனுபவிக்கிறவர்களாயிருந்து இதைப்பார்க்கிலும் எந்த விதமான ஜீவியத்தையும் பெரிதாக எண்ணாமல் ஜீவனுள்ள நிருபணங்களாயிருக்கிறார்கள்.

### சந்தோஷமும் சமாதானமும்

**சந்தோஷத்தை** எல்லா மனுஷரும் விரும்புகிறதில்லையா? தேவன் சந்தோஷத்தின் ஒட்டு மொத்தவடிவமாக இருக்கிறார். எனவே நாம் அதிகமாக **அவரைப்போல்** இருக்க பிரயாசப்படுவதென்பது புத்தியுள்ள காரியமாக இருக்கிறது. ஆகையால் நாமும் அவரைப்போல **சந்தோஷமுள்ளவர்களாயிருப்போம்.** மற்றும் பொல்லாப்பான பாவ ஜீவியத்திற்கு தங்களை ஒப்புக் கொடுத்து வாழ்கிற அனைவரும் இந்த காரியங்கள் மெய்யான சந்தோஷத்தை கொண்டு வராது என்பதற்கு ஒரு



அப்போஸ்தலனாகிய யோவான் இந்த வார்த்தைகளை எழுதினார்: "நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக் கேட்டாலும், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக் கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம்" (1யோவா.5:14,15).

தொடர்ச்சியான இந்த வேதவாக்கியங்களிலிருந்து, கர்த்தர் நம்முடைய ஒவ்வொரு ஜெபத்திற்கும், வைக்கப்பட்டுள்ள விண்ணப்பங்களுக்கும், எந்தவித முன்நிபந்தனைகளில்லாமல் பதிலளிப்பார் என முடிவுக்குவரலாம். ஆனால் வேதவாக்கியங்களை உற்று நோக்கும் போது, ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு ஜெபமாயிருக்க ஜெபத்தில் பல காரியங்கள் சம்பந்தப்பட்டுள்ளது என்பதையும், கர்த்தர் அதைக் கேட்டு பதிலளிப்பார் என்பதையும் நாம் காணமுடியும்.

**முதலாவது,** தன்னுடைய ஜெபங்கள் கேட்கப்படும்படிக்கு ஒருவன் கிறிஸ்தவனாக அல்லது தேவனுடைய பிள்ளையாக இருக்க வேண்டுமென வேதவாக்கியங்கள் கற்பிக்கிறது. பாவிகளுக்குத் தேவன் செவிகொடுக்கிறதில்லையென்று யோவான்9:31-ல் வாசிக்கிறோம். ஏன் தேவன் பாவிகளுக்குச் செவிகொடுக்கிறதில்லை? பாவத்தினால் - பாவம் தேவனுக்கும் தேவனை நோக்கி ஜெபிக்க முயலுகின்ற ஒரு தனிப்பட்ட நபருக்குமிடையே வருகிறது. நீண்டகாலத்திற்கு முன் தீர்க்கதரிசி, "இதோ, இரட்சிக்கக்கூடாதபடிக்குக் கர்த்தருடைய கை குறுகிப்போகவுமில்லை; கேட்கக்கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை. உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது; உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது என்றான் (ஏசா.59:1,2). மீண்டும் ஒரு பாவி, தேவனுடைய பிள்ளையாக இராதபோதும் தேவன் அவனுடைய பிதாவாக இராதபோதும் அவன் எவ்வாறு தேவனை நெருங்கமுடியும்? ஒரு பாவி தேவனிடத்தில் ஜெபிக்கமுடிந்தால் மேலும் தேவன் அவனுக்குச் செவிசாய்த்து தன்னுடைய ஜெபத்திற்குப் பதிலளிக்க வேண்டுமென அவன் எதிர்பார்த்தால் பிறகு கிறிஸ்தவனல்லாதவனுக்கு மேலாக கிறிஸ்தவன் என்ன பலனைப் பெற்றிருப்பான்? அது தேவனிடத்திற்கு ஜெபிக்கவரும்போதும் கர்த்தர் ஒருவனுடைய ஜெபத்தைக் கேட்டு பதிலளிப்பாரென நம்பிக்கை கொண்டிருக்கும் போதும் சிலர் என்ன நினைக்கிறார்கள் என்பதற்கு மாறாக, கிறிஸ்தவனாயில்லாதவனுக்கும் கிறிஸ்தவனாயிருக்கின்றவனுக்குமிடையே ஒரு பெரிய வித்தியாசம் இருக்கிறது.

**இரண்டாவதாக,** ஒருவனுடைய ஜெபம் கேட்கப்படவேண்டுமானால், தேவனுடைய பிள்ளை நீதியிலும் கர்த்தரிடத்தில் உள்ள விசுவாசத்திலும் நிலைத்திருக்க வேண்டுமென தேவனுடைய வார்த்தை போதிக்கிறது. பேதுரு தான் காலத்திய கிறிஸ்தவர்களுக்கு, "கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது; அவருடைய செவிகள் அவர்கள் வேண்டுதலுக்குக் கவனமாயிருக்கிறது; தீமைசெய்கிறவர்களுக்கோ கர்த்தருடைய முகம் விரோதமாயிருக்கிறது" (1பேது.3:12) என்று எழுதினார். கிறிஸ்தவன் பாவஞ்செய்து அல்லது தேவனை விட்டு விலகி இருப்பானென்றால், அவன் மனந்திரும்பி, தன்னுடைய குற்றங்களை அறிக்கையிட்டு, தான் மன்னிக்கப்படும்படிக்கு கர்த்தரிடத்தில் ஜெபிக்கவேண்டும். யாக்கோபு, "நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு,

உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள், நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது'' (யாக்.5:16) என்றார். பிறகு மாயவித்தைக்காரனாகிய சீமோன் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து, தேவனுடைய பிள்ளையாக மாறினான், அவன் பேதுருவும் யோவானும் சமாரிய கிறிஸ்தவர்கள் மேல் கைகளை வைத்ததைப் பார்த்தபோது, அவர்கள் பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பெற்றிருக்கிறார் களென்று அறிந்து, அவன் தேவனுடைய வரத்தை பணத்தினாலே வாங்க முயற்சித்தான் என்று வேதப்பகுதி சொல்லுகிறது. இப்போது பின்வந்தது என்ன என்று கவனியுங்கள்: ‘‘பேதுரு அவனை நோக்கி: தேவனுடைய வரத்தைப் பணத்தினாலே சம்பாதித்துக்கொள்ளலாமென்று நீ நினைத்தபடியால் உன் பணம் உன்னோடேகூட நாசமாய்ப்போகக்கடவது. உன் இருதயம் தேவனுக்குமுன்பாகச் செம்மையாயிராதபடியால், இந்த விஷயத்திலே உனக்குப் பங்குமில்லை பாகமுமில்லை. ஆகையால் நீ உன் துர்க்குணத்தைவிட்டு மனந்திரும்பி, தேவனை நோக்கி வேண்டிக்கொள்; ஒருவேளை உன் இருதயத்தின் எண்ணம் உனக்கு மன்னிக்கப்படலாம். நீ கசப்பான பிச்சிலும் பாவக்கட்டிலும் அகப்பட்டிருக் கிறதாகக் காண்கிறேன் என்றான். அதற்குச் சீமோன்; நீங்கள் சொன்ன காரியங் களில் ஒன்றும் எனக்கு நேரிடாதபடிக்கு எனக்காகக் கர்த்தரை வேண்டிக் கொள்ளுங்கள் என்றான்'' (அப்.8:20-24). சீமோன் மனந்திரும்பாமல் மன்னிப் பிற்காக வேண்டிக்கொள்ளாமலிருந்து, ஜெபத்தில் தேவனிடத்திற்குச்சென்று கேட்கப் பட்டிருப்பான் என ஒரு நிமிடம் நாம் கற்பனை செய்யமுடியுமா?நிச்சயமாக முடியாது.

**மூன்றாவதாக,** எல்லா சீஷர்களும் தங்களுடைய ஜெபங்கள் கேட்கப்பட்டவைகளாயிருக்கும்படி சில விண்ணப்பங்களை உருவாக்க அவர்கள் இதைச் செய்யவேண்டியவர்களாயிருந்தார்களென சுட்டிக்காண்பிக்கின்ற வசனங்களைக் கவனியுங்கள், இந்த வசனங்களில் வாக்குத்தத்தங்களுக்கு முன்போ அல்லது வாக்குத்தத்தங்களைப் பின்பற்றியோ, கர்த்தர் சில நிபந்தனைகளின் அடிப்படையில் வாக்குத்தத்தங்களை உருவாக்குகிறார். உதாரணமாக யோவான்14:14-ல் கிறிஸ்து, ‘‘என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்'' என்றார். ஆனால் அதற்கடுத்த வசனம் யோவான்14:15-ல், கிறிஸ்து, ‘‘நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்'' என்றார். கர்த்தர் பிதாவே என்றழைத்து எதையாகிலும் விண்ணப்பிக்கும் தேவனுடைய பிள்ளையாயிருந்தாலும் கர்த்தருடைய கற்பனைகளைக் கைக்கொள்ள அவரிடத்தில் போதுமான அளவு அன்புகூராத ஒருவனுக்காகிலும் கர்த்தர் ஜெபத்திற்குப் பதிலளிக்கிறாரென இப்போது உங்களால் கற்பனை செய்யமுடிகிறதா? யோவான்15:7-ல் அவர், ‘‘நீங்கள் என்னிலும் என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக் கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்'' என்றார். இந்தக் கூற்றுகளில் மைய வார்த்தைகள் என்னவென்றால், ‘‘நீங்கள் என்னிலும் என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால்,'' என்பவைகளே. ஒருவன் கர்த்தரிலும் கர்த்தருடைய வார்த்தை அவனிலும் நிலைத்திருந்தால், அந்த மனிதன் எப்படிப்பட்ட வனாயிருப்பான்? அவன் தேவனுடைய விசுவாசமுள்ள பிள்ளையாயிருப்பான், நிச்சயமாக. ஆனால் ஒருவேளை ஒருவன் கர்த்தரில் நிலைத்திராமலும் அவருடைய வார்த்தை அவனில் நிலைத்திராமலும் இருந்தால், கர்த்தர் அந்த மனிதனுடைய விண்ணப்பத்திற்கு பதிலளிப்பாரா?



**வேத அறிவுப்போட்டி**
**எண் 204-ல் வெற்றிபெற்றவர்**

| | |
|---|---|
| 42. E.ஜேசுரத்தினம் | - பாண்டிச்சேரி |
| 43. Mrs.ஜெயமணிராஜம்மாள் | - கடலூர் |
| 44. G.நிர்மலாவின்சென்ட் | - புங்கமுத்தூர் |
| 45. Mrs.ஜோதிமணிஅப்பாத்துரை | - ஸ்ரீ புத்தூர் |
| 46. S.தங்கம் | - கன்னியாகுமரி |
| 47. Mrs.ஜெபசீலிஜெயக்கொடி | - திருச்சி |
| 48. P.சந்திராடேனியல் | - நஞ்சான்குளம் |
| 49. Mrs.கெத்சிசெல்வின் | - சென்னை |
| 50. Mrs.கிரேஸ் ஸ்டெல்லாபக்தர் | - சென்னை |
| 51. Mrs.கிரேஸ்சங்கீதா | - தூத்துக்குடி |
| 52. T.ராஜாத்தி | - கோம்பை |
| 53. Mrs.ஃபிராங்களினாஜான் | - ஊட்டி |
| 54. Mrs.இந்திராஜெபக்கனி | - நாசரேத் |
| 55. Mrs.கமலவேனி | - சென்னை |
| 56. N.ஜெபத்தாய் | - நாசரேத் |
| 57. T.ஏஞ்சலின் நேசமலர் | - கன்னியாகுமரி |
| 58. Mrs.தேவதாதேவப்பிரியம் | - சென்னை |
| 59. B.ஸ்டெல்லா | - கூத்தூர் |

உங்கள் நண்பர்களுக்கு
இவ்விதழை கொடுத்து
படிக்கச் சொல்லலாம்.
அவர்களும் சத்தியத்தை
அறிய ஒரு வாய்ப்பை
ஏற்படுத்திக் கொடுங்கள்.



**இவ்விதழுக்கான சந்தா செலுத்திவிட்டீர்களா!**

**வேத அறிவுப்போட்டி**
**எண் 205-ல் வெற்றிபெற்றவர்**

| | |
|---|---|
| 42. K.S.மாணிக்கவாசகம் | - திருச்சி |
| 43. Mrs.ஃபிராங்களினாஜான் | - ஊட்டி |
| 44. Mrs.ஜெபக்கனி | - திருநெல்வேலி |
| 45. J.விக்டர்சுவிசேஷமுத்து | - ஆனந்தபுரம் |
| 46. Mrs.சாந்தாபழநி | - தருமபுரி |
| 47. Mrs.ஜாய்ஹெலன்புனிதா | - சென்னை |
| 48. S.சாந்தகுமாரி | - நாசரேத் |
| 49. Mrs.அல்லிராணிகாட்வின் | - சென்னை |
| 50. Mrs.ஜெபத்தாய் | - நாசரேத் |
| 51. Mrs.சொர்ணமணிதாமஸ் | - தூத்துக்குடி |
| 52. Mrs.தேவதாதேவபிரியம் | - சென்னை |
| 53. K.ரத்னாபாய் பிரசாத் | - மதுரை |
| 54. S.செல்வராஜ் | - பொள்ளாச்சி |
| 55. K.ராணி | - தூத்துக்குடி |
| 56. D.தேவபுஸ்பம் | - நாசரேத் |
| 57. S.ரெஜினாசெல்வராஜ் | - நாசரேத் |
| 58. G.அந்தோனிதாஸ் | - தஞ்சை |
| 59. T.ஏஞ்சலினாநேசமலர் | - கன்னியாகுமரி |
| 60. T.ராஜாத்தி | - கோம்பை |
| 61. Mrs.சரோஜினி ராஜபால் | - திருநெல்வேலி |
| 62. Miss.சாந்தாதேவி | - தேனி |
| 63. Mrs.கிரேஸ் சங்கீதா | - தூத்துக்குடி |
| 64. Mrs.ஜேதிமணி அப்பாத்துரை | - பெருமாள்பட்டி |
| 65. E.செல்வம் | - திருநெல்வேலி |
| 66. Mrs.ஜெயமணி | - கடலூர் |
| 67. Mrs.அன்னம்மாள் | - தூத்துக்குடி |
| 68. S.தங்கம் | - கன்னியாகுமரி |
| 69. Mrs.சுசிலாராஜசிங் | - திருநெல்வேலி |
| 70. Mrs.கமலவேனி | - சென்னை |
| 71. A.ஜெயந்தி | - குமாரபாளையம் |
| 72. G.பூங்கோதை | - வேலாயுதம்பாளையம் |
| 73. Mrs.எபிநேசர் எட்வேர்டு | - கடலூர் |
| 74. Mrs.புஷ்பா சோபனம் | - கன்னியாகுமரி |

**வேத அறிவுப்போட்டியில் வெற்றிபெற்ற யாவருக்கும் வாழ்த்துக்கள்! வேதஅறிவுப்போட்டியாளர் அனைவரையும் குமுளி கூட்டத்திற்கு அழைத்திருந்தோம் ஆனால் இரண்டு சகோதரிகள் மட்டுமே பதில் கொடுத்தார்கள். "அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ சிலர் என்றார்" மத்தேயு 20:16**

**ஜெபியுங்கள்**



▶▶ கடந்த மாதம் நடைபெற்ற வாசகர் கூட்டம் சிறப்பாக நடை பெற்றமைக்காக...
▶▶ இம்மாத கூட்டங்களுக்காக...
▶▶ நமது இதழின் புதிய வாசகர்களுக்காக...
▶▶ வேதாகம பள்ளிக்காக...
▶▶ அனைத்துவிதமான நோயாளிகளுக்காக...

**கர்த்தருடைய திராட்சத்தோட்டத்தில் வேலை செய்ய வாலிப சுவிசேஷகர்கள் தேவை. உணவும், உடையும், மற்றும் உறைவிடமும் கொடுக்கப்படும்.**

**<u>இயேசு சொல்கிறார்:</u>**

**“ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்'' யோவான்12:26.தொடர்புக்கு :94435 58041**



**JOIN OUR**
**WORLD EVANGELISM BIBLE SCHOOL RIGHT NOW**
Contact: 94435 58041

| வேத அறிவுப்போட்டி எண் 204-ன் விடைகள் | | வேத அறிவுப்போட்டி எண் 205-ன் விடைகள் | |
|---|---|---|---|
| 1. யெரொபெயாமை | - 2இரா.17:21 | 1. சூசான் | - எஸ்.3:15 |
| 2. நித்திய ஜீவன் | - 1யோவா.3:15 | 2. யூதாஸ்காரியோத்து | - யோவா.12:5 |
| 3. தாவீது | - 1 நாளா.29:14 | 3. யோபு | - யோபு 13:15 |
| 4. லவோதிக்கேயா | - வெளி.3:16 | 4. இயேசு | - அப்.2:23 |
| 5. இரண்டாம் வகுப்பில் | - 2நாளா.34:22 | 5. நிலைத்திருப்பாய் | - சங்.37:27 |
| 6. வேதபாரகர் பரிசேயர் | - மத்.5:20 | 6. மகிமையுண்டாவதாக | - ரோம.11:36 |
| 7. யோகனான் | - எஸ்றா 10:6 | 7. பிரியம் | - நீதி.15:8 |
| 8. சீமோன் | - மாற்.14:3 | 8. பவுல் | - 1கொரி.15:8 |
| 9. ஆம். | - நெகே.9:20 | 9. தாழ்ந்த | - பிரச.10:6 |
| 10. பின்பற்றாதிருங்கள் | - லூக்.21:8 | 10. பவுல் | - 2கொரி.4:7 |

| வேத அறிவுப்போட்டி எண் 204-ல் வெற்றிபெற்றவர் | | வேத அறிவுப்போட்டி எண் 205-ல் வெற்றிபெற்றவர் | |
|---|---|---|---|
| 1. Tmt.மரகதம் திரவியம் | - கேம்பை | 1. Mrs.ஆலிவ்ஜெயபாலன் | - கோவை |
| 2. Mrs.ரூத்ஜெயராணிஅன்புராஜ் | - திருநெல்வேலி | 2. S.லதாசூரியமூர்த்தி | - மல்லிங்காபுரம் |
| 3. Mrs.ஜெமிமா நல்லையா | - மதுரை | 3. A.டேவிட் ஜெயச்சந்திரன் | - மதுரை |
| 4. S.ஜாய்ஸ்சந்திரகாந்தா | - நெல்லூர் | 4. Mrs.அன்புக்கமலம் | - காரைக்குடி |
| 5. Mrs.ஜெனிதர்மராஜ் | - திருநெல்வேலி | 5. Mrs.பாலின்மார்ட்டின் | - காரைக்குடி |
| 6. Mrs.அன்புகமலம் | - காரைக்குடி | 6. Mrs.ரூக்மணிஜெயசீலன் | - தேனி |
| 7. Mrs.பாலின்மார்ட்டின் | - காரைக்குடி | 7. Mrs.மேரிநிர்மலா | - மதுரை |
| 8. Sis.ஜாய்ஸ்மேத்யூ | - வி.கே.புரம் | 8. Mrs.ஃபுளோராசுந்தர் | - மதுரை |
| 9. K.ராணி | - தூத்துக்குடி | 9. Mrs.ஞானம்பிலிப் | - கோவை |
| 10. Mrs.வசந்தாரபீந்தரன் | - தூத்துக்குடி | 10. Tmt.மரகதம்திரவியம் | - கோம்பை |
| 11. Mrs.ஜாய்மேரி | - திண்டுக்கல் | 11. Mrs.ஜெபசீலிஜெயக்கொடி | - திருச்சி |
| 12. Mr.அதிசயம் | - விருதுநகர் | 12. R.ஞானசிரோன்மணி | - சமயநல்லூர் |
| 13. A.டேவிட் ஜெயச்சந்திரன் | - மதுரை | 13. Mrs.பிரமிளாரேவதி | - கோவை |
| 14. J.ஆலிவ் | - கோவை | 14. J.ரேச்சல்தமிழரசி | - பசுமலை |
| 15. K.ரத்னாபாய்பிரசாத் | - மதுரை | 15. R.ஜெபக்கனி | - கூமாபட்டி |
| 16. Mrs.ரூபவல்யா | - தூத்துக்குடி | 16. Mrs.கிரேஸ் ஸ்டெல்லா பக்தர் | - சென்னை |
| 17. Mrs.நவரத்தினஞானராஜ் | - நாசரேத் | 17. Mrs.குணசீலி | - வைகுண்டம் |
| 18. R.அந்தோணியம்மாள் | - கலுங்குவிளை | 18. Mrs.நவரத்தினம்ஞானராஜ் | - நாசரேத் |
| 19. S.அன்னம்மாள் | - தூத்துக்குடி | 19. Mrs.ஜெனிதர்மராஜ் | - திருநெல்வேலி |
| 20. Mrs.ஜெபாநியூட்டன் | - திருநெல்வேலி | 20. S.சீமோன் | - திருநெல்வேலி |
| 21. Mrs.ஃபுளோராசுந்தர் | - மதுரை | 21. Mrs.ஜெயாமேரிதாய் | - திண்டுக்கல் |
| 22. Mrs.மேரிநிர்மலா | - மதுரை | 22. Mrs.கிறிஸ்டோபல்சாலமோன் | - கோவை |
| 23. B.ஞானதீபம் ஜெபராஜ் | - திருநெல்வேலி | 23. Mrs.ரூபவல்யா | - தூத்துக்குடி |
| 24. Mrs.ருக்மணிஜெயசீலன் | - தேனி | 24. Mrs.ஜாய்மேத்யூ | - வி.கே.புரம் |
| 25. Mrs.ஜாய்ஹெலன்புனிதா | - சென்னை | 25. R.அந்தோணியம்மாள் | - கலுங்குவிளை |
| 26. S.மாணிக்கவாசகம் | - திருச்சி | 26. Mrs.ரூத்ஜெயராணிஅன்புராஜ் | - திருநெல்வேலி |
| 27. Mrs.கிறிஸ்டோபல்சாலொமோன் | - கோவை | 27. Mrs.ஜெமிமாநல்லையா | - மதுரை |
| 28. J.விக்டர்சுவிசேஷமுத்து | - தூத்துக்குடி | 28. Mrs.ஞானதீபம்ராஜ் | - திருநெல்வேலி |
| 29. S.சாந்தகுமாரி | - நாசரேத் | 29. S.ஜாய்சந்திரா | - நெல்லூர் |
| 30. J.செல்வராஜ் | - தூத்துக்குடி | 30. Mrs.ராஜம்மாள் | - திருப்பூர் |
| 31. A.ஆலிஸ்குணசீலி | - தூத்துக்குடி | 31. E.அதிசயம் | - பனைகுடி |
| 32. Miss.சாந்தாதேவி | - தேனி | 32. P.சந்திராடேனியல் | - நஞ்சான்குளம் |
| 33. S.லதா | - தேனி | 33. M.ராமச்சந்திரன் | - ஒட்டநத்தம் |
| 34. R.ஜெபக்கனி | - கூமாபட்டி | 34. R.கஸ்தூரி | - ஒட்டநத்தம் |
| 35. J.ஜான்ஸி | - ஆனைமலை | 35. J.செல்வராஜ் | - தூத்துக்குடி |
| 36. Mrs.பிரமிளாரேவதி | - கோவை | 36. Mrs.ராஜம்மாள் | - விருதுநகர் |
| 37. Mrs.ஞானம்பிலிப் | - கோவை | 37. Mrs.ஜாய்மேரி | - திண்டுக்கல் |
| 38. Mrs.சாந்தாபழநி | - தருமபுரி | 38. Mrs.கெத்சி செல்வின் | - சென்னை |
| 39. G.பூங்கோதை | - கோபி | 39. Mrs.நிர்மலாவின்செண்ட் | - புங்கமுத்தூர் |
| 40. Mrs.அல்லிராணிகாட்வின் | - சென்னை | 40. Mrs.வசந்தாரபீந்திரன் | - தூத்துக்குடி |
| 41. A.K.ஜெயா | - மார்தாண்டம் | 41. Mrs.இந்திராஜெபக்கனி | - தூத்துக்குடி |



யோவான்15:16-ல் கிறிஸ்து, "...நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக்கொள்வது எதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத்தக்கதாக " என்றார். இந்த வசனத்தின் முதல்பகுதியில் அவர் அவர்களைத் தெரிந்துகொண்டு அவர்கள் கனிகொடுக்கும்படிக்குச் சொன்னார். இங்கே அவர் சீஷர்களோடு பேசிக்கொண்டிருக்கிறார், அவர்கள் கனிகொடுக்கத் தவறுகின்றார்களென்றால், கர்த்தர் அவர்களுடைய விண்ணப்பங்களுக்குப் பதிலளிக்கின்றாரென நீங்கள் கற்பனை செய்ய முடியுமா? மீண்டும், ஒருவன் அவன் பெற்றுக்கொள்வான் என கிறிஸ்து வாக்குப்பண்ணினார் (மத்.7:7,8) எனக்கேட்டால், கிறிஸ்து தொடர்ந்து இவ்வாறு கூறுகின்றார், "உங்களில் எந்த மனுஷனானாலும் தன்னிடத்தில் அப்பத்தைக் கேட்கிற தன் மகனுக்குக் கல்லைக் கொடுப்பானா? மீனைக் கேட்டால் அவனுக்குப் பாம்பைக் கொடுப்பானா? ஆகையால், பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?" (மத்.7:9-11). இந்தப் பகுதியின்படி பிதா - குமாரன் உறவிலும், அவரில் விசுவாசமிக்க பிள்ளைகளாகவுமிருக்கிற சீஷர்களோடு கிறிஸ்து பகிர்ந்தளிக்கின்றார் என்பது நிச்சயம். நீங்கள் இந்த வேதப்பகுதியைப் படிக்கையில், கர்த்ருடைய ஆசீர்வாதங்கள் அவருக்குக் கீழ்ப்படிகிறவனுக்கும் அவரிடத்தில் விசுவாசத்தில் நிலைத்திருக் கிறவனுக்கும் உண்டு என நீங்கள் எப்போதும் அறிந்துகொள்வீர்கள். கீழ்ப்படியாதவர்களையும், முரட்டாட்டம் பண்ணுகிறவர்களையும் அவர் எவ்வாறு ஆசீர்வதிக்கமுடியும்?

மேலும், கடைசியாக 1யோவான்5:14,15-ல் பிதாவனவர் அவருடைய சித்தத்தின்படி நாம் கேட்டால் அவர் அதைக் கேட்டு நம்முடைய ஜெபங்களுக்கு செவிகொடுப்பாரென யோவான் மிகத்தெளிவாக வெளிப்படுத்துகிறான். தன் பிள்ளைகளை நேசிக்கிற ஒரு தகப்பன் தன் பிள்ளைகளுக்குத் தீமையளிக்கும் அல்லது தன் புத்திரனை கெடுக்கும் பொருட்களை அவர்களுக்குக் கொடுக்கமாட்டான். ஆனால் அனைத்து சாத்தியமான வழியிலும் ஏதுவிருக்குமானால், தகப்பன் தன் பிள்ளைகளின் விண்ணபத்திற்குச் செவிகொடுப்பான். இதுவே நம்முடைய பிதாவினிடத்திலும் உள்ளது. நாம் நம்முடைய விருப்பத்தில் ஏதோ சிலவற்றை நினைக்கலாம், ஆனால் சகல ஞானமுடைய நம்முடைய பிதா வேறொரு விதமாக நினைக்கலாம். ஆனால் ஒரு அன்பின் பிதா நமக்கு எது நன்மையானதோ அதன்படி நமக்கு செய்வார் என நாம் உறுதியுடனிருக்கவேண்டும். அத்தோடு தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கிறதென்ற பவுலின்கூற்றினை நாம் நினைக்கவேண்டும் (ரோமர்8:28).

கிறிஸ்தவர்களாகிய நாம் எப்போதும் அவரை நோக்கியிருக்கத்தக்க ஒரு பிதாவைப் பெற்றிருக்கும் பாக்கியமுடையவர்களாயிருக்கிறோம். கிறிஸ்துவானவர் மனுஷர் எப்போதும் ஜெபிக்க வேண்டியவர்களாயிருக்கிறார்கள் என்றார் (லூக்.1:8) பவுல் இடைவிடாது ஜெபிக்க வேண்டுமென்றார் (1தெச.5:17). ஆதிக்கிறிஸ்தவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும் அப்பம் பிட்குதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள் என நாம் அறிவுறுத்தப்படுகிறோம் (அப்.2:42). மீண்டும், யாக்கோபு, யாராவது துன்பப்பட்டால் அவர்கள் ஜெபம்பண்ணக்கடவர்கள் என்கிறார்

(யாக்.5:13). பிறகு அவர் நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது என்றார் (யாக்.5:16). இருந்தாலும் கர்த்தர் வியாதியஸ்தருக்கு ஒரு அற்புதம் நடக்க வேண்டுமென்ற நம்முடைய ஜெபங்களுக்கு பதிலளிப்பதாகவும் ஜெபங்கள் ஒரு வித்தியாசத்தை உருவாக்குமெனவும் வாக்குப்பண்ணவில்லை. தேவன் இயற்கை விதிகளின்படியும், மருந்துகள் மூலமும், டாக்டர்கள் மற்றும் நர்சுகள் மூலமாகவும் வியாதிசுகமடைய கிரியை நடப்பிப்பார் என நாம் ஜெபிக்கலாம். நாம் அடிக்கடி தேவன் காரியங்களை மாற்றியமைக்க தாம் கிரியை செய்வதின் மூலம் அவர் தம்முடைய விற்பனையில் இருக்கின்றாரென அவர் வழியையும் பிரசன்னத்தையும் குறைத்து மதிப்பிடுகிறோம். நாம் சிலநேரங்களில் ஒரே ஒரு வழி அவருடைய வல்லமையைக் காண்பிப்பதும் அல்லது ஒரே ஒரு வழி அற்புதங்களின் மூலம் அவர் சிலவற்றைச் செய்வதுமென நினைக்கிறோம். இது விஷயமல்ல, நம்முடைய விசுவாசமெங்கே? தவிர, இயேசு நோயாளிக்கு வைத்தியன் தேவையெனச் சொன்னார், நாம் நம்முடைய தேவனாகிய கர்த்தரை சோதிக்கக்கூடாது (மத்.9:12;மத்.4:7).

நிச்சயமாக நம்முடைய ஜெபங்கள் நம்முடைய பிதாவினால் கேட்கப்படவேண்டுமானால், நமக்காகப் பரிந்து பேசுகிறவரும், மத்தியஸ்தரும், நம்முடைய பிரதான ஆசாரியருமாகிய கிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கவேண்டும் (1யோவா.2:1; 1தீமோ.2:2:5; எபி.3:1).

ஜெபத்தில் விசுவாசம் கொண்டுள்ளீர்களா? பிதா தாமே உங்களுடைய ஜெபத்தைக் கேட்டு உங்கள் விண்ணப்பங்களுக்குப் பதிலளிப்பாரென்ற உறுதியுடன் ஜெபிக்க நீங்கள் தகுதியுள்ளவர்களாயிருக்கிறீர்களா? நீங்கள் கிறிஸ்தவர்களாயிராவிட்டால் நீங்கள் பிதாவினிடத்தில் ஜெபிக்கின்ற தகுதியில் இல்லை. கிறிஸ்துவினிடத்தில் விசுவாசம் வைத்து, உங்கள் பாவங்களுக்காக மனந்திரும்பி கிறிஸ்துவினிடத்திலுள்ள உங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு, உங்கள் பாவங்கள் மன்னிக்கப்படும்படிக்கு ஞானஸ்நானம் பெற்றுக்கொள்வதின்மூலம் உங்களைச் சரிசெய்துகொள்ளலாம் (எபி.11:6; யோவா.14:1; மத்.10:32; அப்.2:38). ஒருமுறை நீங்கள் இதைச் செய்கையில் கர்த்தர் உங்களை இரட்சித்து, தம்முடைய சபையில் உங்களைச் சேர்த்துக்கொள்வார் (அப்.2:47). பிறகு கர்த்தருடைய குடும்ப அங்கத்தினராக, கர்த்தருடைய பிள்ளையாக நிலைத்திருந்தால், கர்த்தர் உங்களுடைய ஜெபங்களுக்குச் செவிகொடுத்து அவைகளுக்குப் பதிலளிப்பாரென்ற வாக்குத்தத்தத்தைப் பெற்றவர்களாயிருக்கிறீர்கள்.

**பொது அறிவுச் சோதனை**

1. உச்ச நீதிமன்றத்தின் முதல் பெண் நீதிபதி யார்?
   அ) அன்னிபெசன்ட் அம்மையார் ஆ) விஜய லட்சுமி பண்டிட் இ) பாத்திமா பீவி
2. இந்தியாவில் எத்தனை ரெயில் நிலையங்கள் உள்ளன?
   அ) 6,329 ஆ) 6,867 இ) 5,123
3. காகித ருபாய் நோட்டுக்கள் அச்சிடப்படும் இடம் எது?
   அ) நாசிக் ஆ) மும்பை இ) நாக்பூர்
4. தமிழகத்தில் மோனசைட் தாது எங்கு கிடைக்கிறது?
   அ) தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆ) சேலம் இ) வேலூர்
5. அரபிக் கடலில் கலக்கும் ஆறு எது?
   அ) கோதாவரி ஆ) நர்மதா இ) கிருஷ்ணா

**விடைகள்: 1. பாத்திமா பீவி 2. 6,867 3. நாசிக் 4. தூத்துக்குடி, கன்னியாகுமரி 5. நர்மதா**



# நமது நண்பர்களுக்கு சுவிசேஷம் அறிவித்தல்
# Evangelizing Our Friends
-TVOTI



**நமது நண்பர்களுக்கான ஒரே செய்தி இயேசுவே**
Jesus is the Message to our Friendes

**– சென்ற மாதஇதழின் தொடர்ச்சி**

பவுல் தன்னுடைய செய்தியை பிரபல்யமான இடங்களின் வழியாக பொதுமக்களுக்கு எடுத்துச் சென்றான். அப்.17:22-31 தேவன் ஜீவிக்கிறார் என்பது குறித்தும் இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்த உயிர்த்தெழுதல் குறித்தும் விக்கிரகங்களை வணங்கிவந்த அத்தேனேரிடம் விவரித்துக் கூறினார். அப்.17:32, **"மரித்தோரின் உயிர்த்தெழுதலைக் குறித்து அவர்கள் கேட்டபொழுது, சிலர் இகழ்ந்தார்கள். சிலர்: நீ சொல்லுகிறதை இன்னொருவேளை கேட்போம் என்றார்கள்" என்கிறது.** மற்றவர்களை அழைத்து இயேசுவைக் குறித்துக்கற்றுக்கொள்ள அவர்களை சபை செய்கிற சில செயல்பாடுகளில் பங்குகொள்ளச் செய்வது இன்னொரு மாபெரும் வழியாகும். ஒருவேளை உங்களுடைய வாலிபக் குழு இணைந்து ஒரு விசேஷித்த வெளிப்பயணத்தை மேற்கொள்ளலாம். இவைகள் நண்பர்களை அழைப்பதற்கும் அவர்களிடம் இயேசுவைக் குறித்து அதிகம் பேசவும் நேர்த்தியான தருணங்களாயிருக்கிறது.

இயேசுவைக் குறித்துப் பேசத் தொடங்குவதற்கு இது மிகச் சிறந்த வழி எப்படியாயினும், உங்களுடைய ஒவ்வொரு நாள் வாழ்விலும் அவர் இடைபட வழிவகுக்கிறது. உங்களுடன் உங்களது பள்ளிக்கு வேதாகமத்தை எடுத்துச் செல்லுங்கள். உங்களுடைய உணவினை உண்ண உட்காரும் போது ஜெபியுங்கள். ஒவ்வொரு வாரத்தின் கடைசிநாளில் (சனி) நீங்கள் சபையாருடன் என்னவெல்லாம் செய்தீர்கள் என்று மற்றவர்களுக்குச் சொல்லுங்கள். அவர்கள் கிறிஸ்து உங்களது வாழக்கையில் வாழ்கிறார் என்ற மாதிரியை உங்களில் அவர்கள் கண்டு கொள்ளட்டும். ஒரு நல்ல மாதிரி மற்றவர்களிடம் அவரைப் பற்றி கூறுவதற்கு மிகவும் சக்திவாய்ந்ததாக இருக்கிறது. அப்போஸ்தலனாகிய பவுல், **"நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறது போல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்" (1கொரி.11:1) என்றார்.** இயேசு, **"...., மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது" (மத்.5:16) என்றார்.**

இதற்குத் தொடர்புள்ள கீழ்க்காணும் வேதவாக்கியங்களை படித்து விவாதியுங்கள்:

**மத்.5:16, 28:18-20, மாற்.16:15, யோவா.3:16, அப்.4:12,8:35**

**ஒவ்வொரு நாளும் தூங்குவதற்கு முன்பு வேதம் வாசித்து பின்பு ஜெபித்துவிட்டு படுக்கைக்குச் செல்லுங்கள்**